கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு என்ன என்ன நடவடிக்கைகளை மற்ற முறைகளில் இப்படிப்பட்ட சட்டத்தைப் போடாமல், அரசு எடுக்க முடியுமோ அப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும். அப்படியில்லாமல் இப்படிப்பட்ட உச்சநீதி மன்றத்திற்குச் சென்று ஒரு கேள்விக் குறியாக நிற்கக்கூடிய ஒரு சட்டத்தை இயற்றுவது சரியாக இருக்குமா? this is not good.

ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்பதுதான் அரசுக்கு விவேகமாக இருக்கும் என்பதைத் தாழ்மையோடு தெரிவித்து, இதை வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''1984–ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ்நாடு 1984–ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

THIRU P. PONNURANGAM: I object to the introduction of this Bill.

1984 பிப்ரவரி 18]

Mr. SPEAKER Mr. P, Ponnurangam's objection is recorded. The objections of all the opposition parties who have objected to the introduction have been recorded.

திரு. ப. பொன்னுரங்கம்: இதற்கு முந்தைய மசோதாவில், அவருக்கு ஒரு நியாயம் வழங்கப்பட்டது: இதில் எனக்கு வேறொரு நியாயம் என்பது சரியல்ல. அந்த மசோதாவின் மீது பேசுவதற்கு அனுமதித்து இருக்கிறீர்கள்; இதற்கு ஏன் மறுக்கிறீர்கள்? அதைவிட முக்கியமானது இது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் பெயரைச் சொல்லி, record செய்தால் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அமைச்சரவர்கள் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சிகள் சம்பந்தமாக அமென்மெண்ட் கொண்டு வருகிறார்கள். ஸ்பெஷல் ஆபீசர்களுக்கு மூன்று மாதங்கள் எக்ஸ்டென்ஷன் வேண்டுமென்று. மார்ச் 31-ஆம் தேதி வரைக்கும் ஸ்பெஷல் ஆபீசர்களுக்குப் பதவிக் காலம் இருக்கிறது. ஆனால் கவர்னர் உரையிலேயே ஏப்ரல் மாதம் தேர்தல்களை முடிக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். கவர்னரை மீறி இன்னும் இரண்டு மாதங்கள் நீங்கள் கேட்கிறீர்கள்—மொத்தம் மூன்று மாதங்கள் வேண்டும் என்று கேட்கிறீர்கள்.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். ஆனாலும் கூட இதிலே அதிக நேரத்தை நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காக ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கால நீட்டிப்பினைப் பொறுத்தவரையில் மூன்று மாத காலத்திற்கு நீட்டித்திருந்தாலும், அதிலே ஒரு மாதமோ அல்லது இரண்டு மாதமோ குறைத்துக் கொள்கின்ற அளவுக்கும் அதிலே சட்ட விதிகளைக் கொண்டு வந்திருக்கிறோம். ஏனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதையும் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இப்போது நேரம் இல்லை. 22—ஆம் தேதி பில்லைப் பற்றித்தான் பேசப்போகிறீர்கள். ஆகவே அப்போது பேசிக் கொள்ளலாம். இப்போது 12 மணி ஆகிவிட்டது. உங்கள் கட்சி உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள்தான் பேச வேண்டியிருக்கின்றது. நேரம் இல்லை. அமருங்கள்.

பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

[பேரவைத்தலைவர்] [1984 பிப்ரவரி 18

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ''தமிழ்நாடு 1984—ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.'' (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நேரம் இல்லாத காரணத்தால் பெயர்களை பதிவு செய்வதற்காகச் சொல்கிறேன். திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ப. பொன்னுரங்கம், என் எஸ். வி. சித்தன், இரா. கருப்பையா, துரைமுருகன். ஆகியோர் இதனை எதிர்த்துள்ளார்கள்.

பேரவை முன்னுள்ள கேள்வி; ''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; இச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஊ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன் வடிவு, 1984.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் இல்லாத காரணத்தால் இதனை எதிர்ப்பவர்களை மட்டும் பதிவு செய்வதற்காகச் சொல்கிறேன்.

இந்திய தேசிய காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் இதனை எதிர்த்துள்ளார்கள்.